பதிவு எண். எம். 6311 ★ தொலைபேசி: 61331 ★ தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம் நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 25 (11—11—71) வியாழன் வெளியூர்: ஐப்பசி 26 (12—11—71) வெள்ளி [இதழ்: 124

சென்னை நகரில் நிரந்தரத் தொழிற் கண்காட்சி

சென்னை, நவ. 11—

"மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை விளக்க சென்னை நகரில் நிரந்தரப் பொருட்காட்சி ஒன்றினை அமைக்கத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

"இந்தத் தொழிற் பொருட்காட்சியை ஏற்பாடு செய்யப் பல்வேறு தொழில்களைச் சேர்ந்தவர்களின் வாரியம் ஒன்று விரைவில் அமைக்கப்படும்."

—அமைச்சர் செ. மாதவன்

'வெற்றி விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்பை உருவாக்குவீர்'

'என்றும் கழகத்தின் பக்கமே மக்கள் என்பதை உறுதி செய்வீர்'

பொள்ளாச்சித் தொகுதி வாக்காளர்கட்கு புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். வேண்டுகோள்

சென்னை, நவ. 11—

கழகப் பொருளாளர் புரட்சி நடிகர் எம் ஜி.ஆர். அவர்கள், பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு ஓர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"இதுவரை நடைபெற்ற எந்த இடைத்தேர்தலும் 'கழகத்தின் பக்கம்தான் தமிழ் மக்கள்' என்பதை நிரூபித்துக் காட்டியதுபோலவே, இந்த இடைத்தேர்தலிலும் இலட்சக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் கழகத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டுகிறேன்" என்று அவர் வேண்டிக்கொண்டிருக்கிறார்; அவருடைய அறிக்கை வருமாறு:—

'பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதி வாக்காளப்பெருமக்களே—உங்களை நேரில் சந்தித்து, திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் தோழர் மோகன்ராசு அவர்களுக்கு உங்களின் பேராதரவினை அளித்து மாபெரும் வெற்றியைக் கழகத்திற்குத் தேடித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்வதற்காக வரவிருந்தேன்.

'எதிர்பாராத நிலையில் குதிகாலில் சிறிய அறுவைச் சிகிச்சை மேற்கொண்டதால், குறைந்தது பத்து நாட்களுக்காவது நடக்கக் கூடாதென மருத்துவர்கள் கண்டிப்பான கட்டளையிட்டு விட்டார்கள்.

"பொள்ளாச்சி தொகுதி வாக்காளர்களாகிய நீங்கள், கடந்த இரண்டு தேர்தல்களிலும் கழகத்தை மகத்தான வெற்றி பெறச் செய்துள்ளீர்கள்; அதனால்தான், சிண்டிகேட் காங்கிரசுக்காரர்கள்கூடத் தங்கள் வேட்பாளரை நிறுத்துவதற்குத் துணிவு பெறாமல்—சுயேச்சையாளரை ஆதரித்து—கழகத்தை எதிர்க்கிறார்கள்.

"ஏழை எளிய மக்களின் விரோதிகள் எந்த உருவத்தில் வந்தாலும் பொள்ளாச்சித் தொகுதி மக்களாகிய நீங்கள் அவர்களின் வேடத்தைக் கலைத்து—அவர்களுக்குத் தோல்வியைப் பரிசாகக் கொடுப்பீர்கள் என்பதை நான் மட்டுமல்ல—இந்த நாடே நன்கு அறிந்துள்ளது.

"என்றும், பேரறிஞர் அண்ணா அவர்கள் அமைத்த கழக அரசுக்கு—ஏழைபர் அரசுக்கு—மக்கள் எப்படிப்பட்ட மகத்தான ஆதரவை அளித்துவருகிறார்கள் என்பதை அவ்வப்போது அரசியல் உலகம் அறிந்துகொள்ளும் ஒரு நல்வாய்ப்புத்தான் இதுபோன்ற இடைத் தேர்தல்கள்!

"வெற்றி விழாவில் கலந்துகொண்டு உங்களுக்கு நன்றி கூறும் வாய்ப்பினை நீங்கள் நிச்சயம் நல்குவீர்கள் என்ற உறுதியான நம்பிக்கையுடன் இரு கைகூப்பி வணங்குகிறேன்—வாழ்க அண்ணா நாமம்!

பம்பாய் துறைமுகத்தில் வெடிகுண்டு

பம்பாய், நவ. 11—

பம்பாய் துறைமுகத்தில் சரக்குகள் ஏற்றி—இறக்கும் பகுதி ஒன்றில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு ஒன்றைத் துறைமுகத் தொழிலாளர்கள் கண்டுபிடித்தனர்.

இந்த வெடிகுண்டைப் பாகிஸ்தான் உளவாளிகள் வைத்திருக்கக்கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

பம்பாய் துறைமுகத்தைத் தகர்ப்பதற்காகப் பாகிஸ்தான் உளவாளிகள் இந்த வெடிகுண்டை வைத்திருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது; தீவிர விசாரணை நடைபெற்றுவருகிறது.

புதுவைக் கடற்கரையில் வெடிகுண்டு

புதுவை, நவ. 11—

புதுவைக்கு அருகிலுள்ள வைத்திக்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள், கடற்கரைக்கு அருகில் நான்கு அடி நீளமுள்ள வெடிகுண்டு ஒன்றைக் கண்டுபிடித்தனர்; உடனே அதைப் போலீசாரிடம் கொடுத்தனர்.

அந்த வெடிகுண்டு, பிரெஞ்சு நாட்டுக் குறியுடன் இருந்ததாம்.

உப்பளம் போலீஸ் மைதானத்தில் அந்த வெடிகுண்டு வைக்கப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் எம். ஓ. எச். பாருக், அதை நேரில் சென்று பார்த்தார்; போலீசுப் புலன் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

கன்னியாகுமரி கடற்கரைப் பகுதியில் முன்னெச்சரிக்கை ஏற்பாடு

நாகர்கோவில், நவ. 11—

கடற்கரையிலிருந்து பன்னிரண்டரை மைல் தொலைவில் 2 குழாய்கள் கடல் அலைகளினூடே துருத்திக்கொண்டு தெரிந்ததாகத் தகவல் வந்ததையடுத்து கன்னியாகுமரியைச் சுற்றிலும் போலீசுப் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாவட்ட கலெக்டர் ஏ. பி. முத்துசாமி, 'இப்பகுதியில் பாகிஸ்தான் சப்மரீன்கள் நடமாட்டம் இயலக்கூடியதன்று' என்றார்.

"இங்கு பாகிஸ்தான் நடமாட்டம் எதுவும் இருப்பதாக உறுதி செய்யக்கூடிய தகவல் எதுவும் எங்களுக்குக் கிடைக்கவில்லை" என்று புதுடில்லியிலுள்ள தற்காப்புத் துறை கூறியது.

முட்டம் அருகில் கடலில் சுமார் 12.5 மைலில் இரண்டு குழாய்கள் வெளியே நீட்டிக்கொண்டிருப்பதைப் பார்த்ததாக மீனவர்கள் கூறியதையடுத்து, போலீசு முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளைச் செய்தது.

அறுபதை எய்துகிறார் என். வி. என்.

சென்னை, நவ. 11—

நமது கழகத்தின் துணைப் பொதுச்செயலாளரும்—தமிழகத்தின் தொழிலாளர் நலத் துறை அமைச்சருமான திரு. என். வி. நடராசன் அவர்கட்கு இன்றுடன் வயது ஐம்பத்தொன்பது முடிந்து—நாளை அறுபதாம் அகவையை எய்துகிறார்.

உழைப்பின் உருவமாக—தியாகத்தின் சின்னமாக—'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற இலட்சியத்தின் செயல் வடிவாக—பேரறிஞர் அண்ணா அவர்களால் கண்டெடுக்கப்பட்ட கனகமணியாகக் கழகத்துக் கிடைத்த கருவூலம் ஆவார் திரு. என். வி. நடராசன் அவர்கள்.

எல்லோராலும், 'என்.வி.என்.' என்ற மூன்றெழுத்துக்களால் அன்பு ததும்ப அழைக்கப்படும் அமைச்சர் மாண்புமிகு என். வி. நடராசன் அவர்கட்கு வயது அறுபது பிறக்கிறது என்பதையறிந்து மகிழாதார் யாரும் இருக்க முடியாது.

தந்தை பெரியார் அவர்களின் நன்னம்பிக்கையையும்—பேரறிஞர் அண்ணா அவர்களின் பேரன்பையும் பெற்று, நீதிக் கட்சி—சுயமரியாதை இயக்கம்—திராவிடர் கழகம்—திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய அமைப்புக்களில் முக்கிய பெரும் பங்கு வகித்து அரும் பணியாற்றி வந்திருக்கும் நமது அருமை என்.வி.என். அவர்கள், உழைப்பால் உயர்ந்த உத்தமர்; தியாகத்தால் வளர்ந்த தலைவர்; தாய்மொழி காத்த வீரர்; தமிழக உரிமைக்குப் போராடும் தீரர்; கடமை – கண்ணியம் – கட்டுப்பாடு போற்றும் தகைமையாளர் ஆவார்!

தலைவர்களோடு தலைவராய்—தொண்டர்களோடு தொண்டராய்—தோழர்களோடு தோழராய்—நண்பர்களோடு நண்பராய்—தோளோடுதோள் நின்று கடமையாற்றிடும் பண்பாளர் என். வி. என். அவர்களை, நாம் மட்டுமல்ல—மாற்றாரும் மதித்துப் போற்றுகின்றனர்!

அவருடைய அறுபதாம் ஆண்டு பிறந்த நாளில், நாடே அவரை வாழ்த்துகிறது; நாட்டு மக்களுடன் சேர்ந்து 'நம் நாடு'ம் பல்லாண்டு கூறுகிறது.

வாழ்க—என். வி. என். பல்லாண்டு! வளர்க—அவர்தம் நற்றொண்டு!

வாழ்க்கைக் குறிப்பு

திரு. என்.வி. நடராசன் அவர்கள், 12—11—1912-ல் சென்னை—பெத்துநாயக்கன்பேட்டையில் பிறந்தார்; தகப்பனார் பெயர் விஜயரங்கம்—தாயார் பெயர் தனலட்சுமி. சொந்த ஊர், செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த ஞாயிறு என்னும் கிராமம் ஆகும்.

தொடக்கக் காலத்தில் தீவிரக் காங்கிரசு உறுப்பினராக இருந்தவர் திரு. என். வி. நடராசன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டுச் சென்னை—பெத்துநாயக்கன் பேட்டையில் வசித்தபோது, அவருடைய நட்பு என். வி. என். அவர்களுக்குக் கிடைத்தது; அவருடனும்—தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களுடனும் சேர்ந்து தொழிற் சங்கப் பணிகளில் ஈடுபட்டார்.

1938-ம் ஆண்டில் அப்போதைய முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியார் கட்டாய இந்தியைக் கொண்டுவந்தார்; அப்போது சென்னை மாவட்டக் காங்கிரசுக் கட்சி உறுப்பினராக இருந்த என்.வி.என். அவர்கள், கட்டாய இந்தியை எதிர்த்துக் கட்சிக் கூட்டத்திலேயே தீர்மானம் கொண்டுவந்தார்; அது தோற்கடிக்கப்பட்டது; அதனால் கட்சியை விட்டு வெளியேறினார்.

அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றார்.

அவருடைய துணைவியார் திருமதி புவனேசுவரி நடராசனும்—ஒரு வயது கைக்குழந்தையாக இருந்த மகன் என்.வி.என். சோமுவுடன் சிறை புகுந்தார்.

தமது துணைவியாருடனும்—மகனுடனும் 6 வார காலம் என்.வி.என். சிறையில் இருந்தார்.

நீதிக் கட்சிச் செயற்குழு உறுப்பினராக இரு[illegible] என்.வி.என். பிறகு திராவிடக் கழக மாநிலப்

(4-ம் பக்கம் பார்க்க)

வேலைநிறுத்தம்--கதவடைப்புகளுக்கு இடம் கொடுக்க வேண்டாம்

வேற்றுமைகளை மறந்து உற்பத்தி பெருக்கி அமைதி காத்திடுக!

தொழிலாளர்---தொழிலதிபர்களுக்கு அமைச்சர் என். வி. என். வேண்டுகோள்

சென்னை, நவ. 11—

"நம் கருத்து வேறுபாடுகளையும் – தேவைகளையும் மறந்து உற்பத்தியையும் – தொழில் அமைதியையும் காத்து, வேலைநிறுத்தங்களுக்கும் – கதவடைப்புகளுக்கும் இடம் கொடுக்காமல் உழைக்கும்படி உங்களை அன்பாக அழைக்கிறேன்; அதுவே வங்காள தேச நெருக்கடியின் இருண்ட நிழலின்கீழ் கூடிய இந்தியத் தொழிலாளர் மாநாட்டின் வேண்டுகோளுமாகும்"

என்று, தமிழகத் தொழிலாளர் நல அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள், தொழிலாளர்கட்கும் – முதலாளிகட்கும் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தியத் தொழிலாளர் நல மாநாடு டில்லியில நடந்தது பற்றி விளக்கிக் கடந்த ஞாயிறன்று வானொலியில் பேசுகையில் இவ்வாறு வேண்டுகோள விடுத்தார்; அவர் ஆற்றிய உரை வருமாறு:—

"இந்தியத் தொழிலாளர் மாநாடு முதலில் தோன்றியது 1942-ம் ஆண்டில்தான்; நம்நாடு அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னிருந்தே இம்மாநாடு கூட்டப்பட்டு வருகிறது.

இது ஒரு முத்தரப்பு அமைப்பாகும்; அதாவது, அரசினர் -- தொழிலாளர் -- தொழிலதிபர் ஆகிய மூன்று சக்திகளும் ஒன்று சேர்ந்து செயல் புரியும் அமைப்பாகும்.

சுவிட்சர்லாந்துநாட்டில் ஜெனீவா நகரில் கூட்டப்படும் அனைத்து நாடுகள் தொழிலாளர் மாநாட்டின் அடிப்படையில் 22 அரசினர் உறுப்பினரும் -- 11 தொழிலாளர் உறுப்பினரும் -- 11 தொழிலதிபர் உறுப்பினரும் கூடிய ஓர் அமைப்பாக இது இயங்கி வருகிறது.

இந்த முத்தரப்பு அமைப்பின் முக்கியக் குறிக்கோள்கள் மூவகைப்படுகின்றன; முதலாவது -- தொழிலாளர் நலச் சட்டங்களில் ஒருமைப்பாடு காணுவது; இரண்டாவது--தொழில் தகராறுகளைச் சுமுகமாகத் தீர்த்துவைக்க வழிமுறைகள் வகுப்பது; மூன்றுவது -- தொழிலாளர் நலனைச் சார்ந்த பல வகைப் பிரச்சினைகளைப் பற்றிக் கலந்து ஆலோசித்து முடிவெடுப்பது.

இந்த அமைப்பின்கீழ் ஆண்டுதோறும் ஒரு பொது மாநாடும்-- ஒரு நிரந்தரத் தொழிலாளர்நலக் குழுவின் கூட்டமும் நடைபெறுகின்றன; இவ்விரண்டு கூட்டங்களுக்கும் மத்திய அரசின் தொழிலாளர் நல அமைச்சர் தலைமை வகித்து வருகிறார்.

குறைந்தபட்சபோனசு பிரச்சினை

போனசுப் பிரச்சினைதான் மாநாட்டின் கவனத்தைப் பெரும் அளவில் ஈர்த்தது. தீபாவளி விழாவுக்குமுன் திரு. காடில்கார் அவர்கள், குறைந்தபட்சம் ஆண்டு வருமானத்தில் 8 1/3 சதவிகிதம் போனசாகக் கிடைக்க இடமிருப்பதாகக் கூறியதால், தொழிலாளர்கள் உள்ளத்தில் ஆவல் எழுப்பப்பட்டு -- பிறகு அவர் அதற்கு ஒரு மாற்றுக் கருத்தைக் கூறவேண்டிய நிலை எழுந்தபோது, பம்பாய் – ஆமதாபாத மாநகரங்களில் ஆலைத் தொழிலில் வேலைநிறுத்தங்கள் ஏற்பட்டன; அவருடைய முயற்சியால் அந்த வேலைநிறுத்தங்கள் முடிவடைந்தபோதிலும், மாநாட்டில் அந்த மழையின் தூவானம் விடவில்லை.

தமிழக அரசின் சார்பில் குறைந்தபட்சம் 8 1/3 சதவிகிதம்போனசு கொடுக்கச் சட்டம் பிறப்பித்தே ஆகவேண்டும் என்ற கருத்தை நான் வலியுறுத்திய பொழுது, தொழிலாளர் தலைவர்கள் அதை மிக மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

தமிழக அரசின் முற்போக்கான கருத்துக்கு ஏனைய மாநில அமைச்சர்களும் பரவலான ஆதரவு தெரிவித்தனர்; இறுதியாக போனசுப் பிரச்சினையை ஆறு மாதத்திற்குள் ஆராய்ந்து அறிவுரை கூற, ஒரு இருதரப்பு அல்லது முத்தரப்புக் குழு அமைப்பது என்ற கருத்து அறிவிக்கப்பட்டது.

மூடப்படும் நிறுவனங்கள் அதற்கு முன்னதாக மூன்று மாத முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டுமென்றும், மூடப்பட்டால் அவற்றை அரசே எடுத்து நடத்த வேண்டுமென்றும் அதை அவ்வாறு நடத்தத் தேவையான நிதிவசதி செய்து தரவேண்டியது மத்திய அரசின் பொறுப்பு என்றும் தமிழக அரசின் சார்பில் வலியுறுத்திக் கூறினேன்.

அந்தக் கருத்து, மற்ற மாநில அமைச்சர்களாலும் -- தொழிலாளர் தலைவர்களாலும் ஆதரிக்கப்பட்டது.

முன்னறிவிப்புக் கொடுப்பதில் உள்ள சிக்கல்களைப்பற்றித் தொழிலதிபர்கள் எடுத்துரைத்தனர்.

தமிழக அரசினர் மேற்கூறிய கருத்துக்கேற்ப, மத்திய அரசு இத்திங்கள் முதல் நாளன்று அவசரச் சட்டம் பிறப்பித்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

நிர்வாக ஊழல்களால் மூடப்படும் நிறுவனங்களை முன் விசாரணையின்றி அரசு எடுத்து நடத்தவும், அவ்வாறு நடத்தப்பட்டுவரும் நிறுவனங்களை முன்னுள் உரிமையாளருக்குத் திரும்பத் தராமலிருக்கவும், அந்த நிறுவனங்களின் கடன் சுமைகளை 5 ஆண்டுவரை ஒத்திவைக்கும் வகையிலும் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

மூடப்பட்ட பஞ்சாலை மற்றும் நிறுவனங்களின் உற்பத்தி பாதிக்கப்படாமலிருக்கவும், தொழிலாளருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கவும் இந்தச் சட்டம் பெரும் அளவில் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; இச்சட்டம் குறித்த சாதக பாதகங்களைத் தொழிலாளர் தலைவர்களும் -- தொழிலதிபர்களும் எடுத்துக் கூறிவருகிறார்கள்.

கட்டாய ஓய்வு நிதி

மாநாட்டில் விவாதிக்கப்பட்ட மற்றொரு முக்கியப் பிரச்சினை எல்லாத் தொழில் நிறுவனங்களிலும் தொழிலாளருக்குக் கட்டாயமாக ஓய்வு நிதி (கிராசுடி) வசதி செய்யப்பட வேண்டும் என்பதாகும்.

அதைப்பற்றித் தமிழக அரசின் சார்பாக நான் பேசுகையில், கட்டாய ஓய்வு நிதித் திட்டம் உடனடியாகக் கொண்டுவரப்பட வேண்டுமென்றும், அவ்வாறு செய்ய மத்திய அரசு தவறினால் தமிழக அரசே அவ்வாறு சட்டம் கொண்டுவரத் தயங்காது என்றும் திட்டவட்டமாகக் கூறினேன்.

இது தொழிலாளர் தரப்பில் மட்டுமல்ல -- தொழிலதிபர்கள் தரப்பில்கூட வரவேற்கப்பட்டது; மத்திய அரசு இதைப்பற்றிச் சட்டம் கொண்டுவர ஆவன செய்துவருகிறதென்றும் அறிகிறேன்.

தொழிலாளர் -- தொழிலதிபர் உறவுபற்றி விவாதிக்குங்கால், 'ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்' என்னும் முக்கியப் பிரச்சினையும் பரிசீலிக்கப்பட்டது; அனைவரும் விரும்பினாலும், அனைவரின் கைக்கும் எட்டாமல் தப்பிவரும் ஒரு பிரச்சினை இது; மத்திய சங்கங்கள் இதைப்பற்றித் தங்களுக்குள் மேலும் பேச்சுவார்த்தை நடத்தி முடிவு காண விரும்பியதால், அவர்களுக்கு அவகாசம் அளிக்கப்பட்டது.

இந்தியத் தொழிலாளர் மாநாட்டின் காரசாரமான பேச்சுக்களுக்கு இடையே அடிக்கடி எழுந்த கேள்வி ஒன்றுதான்; அது, 'வங்காள தேச நெருக்கடியில், தொழிலாளர் -- தொழிலதிபர் கடமை என்ன?' என்பதே யாகும்.

நாட்டின் நல்வாழ்வுக்கும் -- பாதுகாப்புக்கும் கேடு விளைவிக்கக் கூடிய இந்த நெருக்கடியில், தொழிலதிபரும் -- தொழிலாளரும் தங்கள் மாறுபாடுகளை மறந்து, தோளோடு தோள் நின்று, உற்பத்தியையும் -- தொழில் அமைதியையும் கண்ணெனக் காப்பதென்று உறுதி அளித்தனர்.

இதே வேண்டுகோளைத்தான் தமிழகத் தொழிலாளர்களுக்கும் -- தொழிலதிபர்களுக்கும், தமிழக முதல்வர் கலைஞர் சார்பாக விடுக்க விரும்புகிறேன்."

பாகிஸ்தானுக்கு ஈரான் மூலம் ஆயுதம்?

அமெரிக்க அரசு பரிசீலனை

புதுடில்லி, நவ. 10—

52 அமெரிக்க 'பாந்தம்' விமானங்களை -- அவற்றை இயக்குவதற்கான ஊழியர்களுடன் -- பாகிஸ்தானுக்கு ஈரான் கொடுத்திருக்கிறதாம்.

அமெரிக்கா தயாரிக்கும் சக்தி வாய்ந்த விமானங்களில், 'பாந்தம்' விமானமும் ஒன்றாகும்.

ஈரான், விமானங்களைக் கொடுத்திருப்பதாக வெளியாகும் செய்தி சரிதானா என்பதை அதிகார வட்டாரங்கள் பரிசீலித்துவருகின்றன.

வங்காள தேச நெருக்கடியில் ஈரானின் நிலையும் -- யாகியா கானின் ஆட்சிக்கு ஆதரவு அளிப்பதும் நன்கு தெரிந்ததாகும்; ஆனால், பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு ஈரான் இராணுவத் தளவாடங்கள் அல்லது விமானம் கொடுத்திருப்பதாகத் திட்டவட்டமான தகவல் இல்லை.

பம்பாய்--அம்பர்நாதில் அண்ணா பிறந்த நாள்

சென்னை -- மதுரை மேயர்கள் பங்கேற்பு

பம்பாய் -- அம்பர்நாத்திலுள்ள அண்ணா நினைவு மன்றச் சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா, 27—10—71 அன்று திரு. வி. மன்னன் தலைமையில் கொண்டாடப்பட்டது.

துவக்கத்தில் மதுரை மேயர் எஸ். முத்து, சென்னை மேயர் சா. கணேசன், சட்டமன்ற உறுப்பினர் சொ. காவேரிமணியம் ஆகியோர் மதுரை வெள்ளைச்சாமி தலைமையில் மேள வாத்தியங்கள் முழங்க கூட்டத் திடலுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

கூட்டத்தில் தமிழகத் தலைவர்களும், தோழர்கள் பொற்கோ, வேலூர் சம்பத், களந்தை சுப்பையா, திருமதியழகன் ஆகியோர் பேசினர்.

டோம்பிவிலி சேவியர், அண்ணாவைப் பற்றிய பாடல்களைப் பாடினார்.

உழைப்பின் பெருமையை மாணவர் உணருவது அவசியம்

படித்து வேலையற்றிருப்போர் கூட்டுறவுப் பண்ணைகளில் உழைக்க முன்வர வேண்டும்

குடியரசுத் தலைவர் வி. வி. கிரி வலியுறுத்தல்

விஜயநகரம், நவ. 10—

"நெருக்கடியான கட்டத்தை நாடு கடந்துகொண்டிருக்கிறது; சமூக மாற்றம் -- பொருளாதார வளர்ச்சிப் பணிகளில், ஆசிரியர்களும் -- மாணவர்களும் பங்குகொண்டு வழிகாட்டிகளாக விளங்கவேண்டும்; இத்தகைய பொறுப்புகளை நிறைவேற்றக் கல்வி நிலையங்கள் பாடுபடவேண்டும்.

"உழைப்பின் பெருமையை மாணவர்களின் மனதில் பதிய வைக்க வேண்டும்.

"படித்த வேலையில்லாதிருப்பவர்களும் -- படிக்காத வேலையற்றிருப்பவர்களும் கூட்டுறவுப் பண்ணைகளில் உழைக்க முற்பட்டால், புதிய இளம் முற்போக்கு விவசாயிகள் தலைமுறை உருவாகும்.

"சனநாயகம் வெற்றிகரமாகச் செயல்பட வேண்டுமானால், மக்கள் கட்டுப்பாட்டுடனும் தொண்டுள்ளத்துடனும் விளங்க வேண்டும்"

என்று குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள், இங்குள்ள மகாராஜா கல்லூரியில் நூற்றாண்டு விழாவைத் தொடங்கிவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டி வலியுறுத்தினார்.

நாட்டுக்குப் பெரும் தீமை ஏற்படும்

திரு. வி. வி. கிரி, மாணவர்களின் எதிர்கால நிலை பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நமது நாட்டில் 70 பல்கலைக் கழகங்களும், 20 இலட்சத்துக்கும் அதிகமாக மாணவர்களும் உள்ளனர்; அவர்கள், சமூகத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள்; எதிர்கால இந்தியாவின் மிகப் பெரிய சக்தியாக விளங்கக்கூடியவர்கள்; நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கவோ அன்றி களங்கப்படுத்தவோ அவர்களால் முடியும்; எனவே, கல்வியின் தரத்தையும் -- நல்ல குணப் பண்புகளை உருவாக்குவதையும் நாம் புறக்கணித்தால், நாட்டுக்குப் பெருந் தீமை விளையும்.

கல்வித்தரத்தைப் பேணிக் காக்கும் நேரம் இது!

கடந்த 25 ஆண்டுகளாக உயர்தரக் கல்வி துரிதமாக விரிவடைந்துவந்திருக்கிறது; கல்வித்தரத்தைப் போதுமான அளவுக்குப் பேணிக் காப்பதில் அதிகக் கவனம் செலுத்தும் நேரம் வந்துவிட்டது

பதட்ட நிலையின் விளைவு

மாணவர்களிடையே வளர்ந்து வரும் பதட்ட நிலை தடுக்கப்படாவிட்டால், சமூகத்தில் குழப்பத்தைத் தோற்றுவிக்கும் சக்திகள் வளர்ந்துவிடும்.

மாணவர்களின் பதட்ட நிலை, பலதடவைகளில் அராஜகத்திலும் -- வன்செயல்களிலும் கொண்டு போய் விட்டிருக்கிறது.

இத்தகையப் பதட்ட நிலையைத் தடுத்து நிறுத்தி -- உயர்தரக் கல்வியைப் பயனுள்ள முறையில் சீரமைத்தால், பல்கலைக் கழக -- கல்லூரி மாணவர்கள், சமூக -- தேசிய முன்னேற்றத்துக்கு வலிமைமிக்க சக்தியாக விளங்குவர்.

தீமைகள் அகன்றாலன்றி முன்னேற முடியாது

கொள்கைகள் இல்லாத அரசியல் -- உழைப்பின்றி ஈட்டிய செல்வம் -- மனச்சாட்சி இல்லாத ஆனந்த வாழ்க்கை -- குணம் பண்பு இல்லாத கல்வி -- அறிவு, நெறிமுறையற்ற வர்த்தகம் -- மனிதாபிமானம் இல்லாத விஞ்ஞானம் -- தியாகம் இல்லாத வழிபாடு ஆகியவை தீமைகளைப் ஏற்படுத்துவதாகும்.

இந்தத் தீமைகள் நமது இன்றைய வாழ்க்கையிலும் பெரும் அளவில் இருந்து வருகின்றன; இவற்றை நாம் தக்கவாறு ஒடுக்கினாலன்றி, உண்மையான பொருளில் முன்னேற்றம் அடைந்ததாக நாம் கூறிக்கொள்ள முடியாது."

இன்றியமையாப் பொருள்களின் விலையேற்றம்

தவிர்க்க அமைச்சர் செ. மாதவன் கூறும் யோசனை

'மாநிலங்களுக்கிடையிலான போக்குவரத்தை அரசே ஏற்கவேண்டும்'

சென்னை, நவ. 10—

"இன்றியமையாப் பொருள்களான அரிசி -- பருப்பு -- எண்ணெய் போன்றவற்றிற்கு மாநிலங்களிடையேயான போக்குவரத்தை மாநில அரசே கையாள வேண்டும்; அப்போதுதான் விலை உயர்வைத் தடுக்க முடியும்.

"வெளி மாநிலங்களில் அதிக விலைக்கு விற்கப்படுவதற்காக இன்றியமையாப் பொருட்கள் ஒழுங்கின்றிக் கொண்டுசெல்லப்படுவதே விலை உயர்வுக்குக் காரணமாகும்"

என்று தொழில்துறை அமைச்சர் செ. மாதவன் அவர்கள் கருத்தறிவித்தார்.

அனைத்திந்திய கூட்டுறவு வாரத்தையொட்டி, தமிழ்நாடு கூட்டுறவுக் கழகம் நடத்திய, 'நுகர்வோர் நாள்' விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் அமைச்சர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"தமிழகத்தில் அரிசி உற்பத்தி உபரியாகவே இருக்கிறது; இருந்தும், அரிசியின் விலை உயர்ந்துகொண்டேபோகிறது; பற்றாக்குறையாக இருந்துவரும் கேரளத்திற்கு அரிசி சென்றுவிடுவதே இதற்குக் காரணமாக இருக்கக்கூடும். ஆகவே, விலைவாசி உயராமல் தடுப்பதில் பயன்படுத்துவோர் கூட்டுறவுக் கழகங்கள் ஒத்துழைக்க வேண்டும்.

கூட்டுறவுக் கழகங்கள் பொருட்களை விற்பனை செய்பவைகளாக மட்டும் இருந்து செயல்படுவதில் பயனில்லை; உற்பத்தித்துறையிலும் அவைகள் ஈடுபட வேண்டும்; அப்படி அவைகள் ஈடுபடுமேயானால், அதற்கு அரசு முன்னுரிமை காட்டி உதவி செய்யும்.

கூட்டுறவு இயக்கம் தன்னிச்சையாகவே வளரவேண்டும்; அரசாங்க உதவியையே எப்போதும் எதிர்பார்க்கும் நிலை இருக்கக்கூடாது."

பயன்படுத்துவோர் கூட்டுறவுக் கழகங்களுக்கு, விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கவேண்டும் என்ற கோரிக்கையை அமைச்சர் நிராகரித்தார்; 'இது அரசுக்கு பெரிய வருமான இழப்பை உண்டாக்கும்' என்றார்.

"பொதுத் துறையும்—கூட்டுறவுத் துறையும் வளருவதுபோல் தனியார் துறையும் வளர்ச்சியடைய வேண்டும்; பொருளாதார வளர்ச்சிக்கு இது அவசியமாகும். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுமானால், அது சனநாயக சோஷலிசமாக இருக்காது. அது வேறு ஏதோ ஒன்றாகத்தான் இருக்கும்" என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வங்க தேச அகதிகள் வருகை

இதுவரையில் 96.08 இலட்சம் பேர்

சல்கத்தா, நவ. 10—

அக்டோபர் திங்களில் இந்தியாவுக்கு வங்காள தேசத்திலிருந்து நாளொன்றுக்கு சராசரி 14,000 அகதிகள் வந்தனர்; செப்டம்பர் திங்களில் ஒரு நாளைக்கு 27,000 அகதிகள் வீதம் வந்தனர்.

வங்காள தேசத்திலிருந்து வந்துள்ள மொத்தம் 96.08 இலட்சம் அகதிகளில், 4 55 இலட்சம் பேர் மேற்கு வங்கம், அசாம், திரிபுரா, பீகார், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலுள்ள மத்திய அரசின் தற்காலிக முகாம்களில் தங்கியிருக்கிறார்கள்.

மாநில முகாம்களில் 66.10 இலட்சம் அகதிகளுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

25.48 இலட்சம் அகதிகள் முகாம்களுக்கு வெளியே தங்கியிருக்கிறார்கள்.

கள்ளக் கடத்தல்

அறவே ஒழிக்க

அதிகாரி கூறும் வழி

சென்னை, நவ. 10—

"தங்கக் கடத்தல் சம்பவங்களில் பத்துக்கு ஒன்றுதான் பிடிபடுகிறது. இந்நிலைமையைத் தடுக்கச் சிறந்த வழி, கள்ளக் கடத்தல் பண்டங்களை நாட்டு மக்கள் நிராகரிப்பதேயாகும்"

என்று மத்திய அதிகாரி பி.வி. குமார் ரோட்டரி கிளப் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"குறைந்தபட்சம் ரூ. 50 கோடி பெறுமான தங்கமும்--சுமார் ரூ. 200 கோடி பெறுமானமுள்ள இதர பண்டங்களும் இந்தியாவுக்குள் கடத்தப்படுகின்றன.

"தங்கக் கடத்தலின் மற்றொரு பிரிவு அந்நியச் செலாவணி மோசடியாகும்.

"இலண்டனில் வியாபாரம் செய்யப்படும் தங்கத்தில் 6-ல் 1 பகுதி துபாய் வழியாக இந்தியாவுக்கு வருகிறது."

தொழில் நுட்பப் பல்கலைக்கழகம்

இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழகத்தில் அமையும்

ஐதராபாத், நவ. 10—

தமிழ்நாடுதான், நாட்டில் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்றைக் கொண்டிருக்கின்ற முதலாவது மாநிலமாக இருக்கும்; இப்பல்கலைக் கழகத்துடன் பல்வேறு பொறியியல் கல்லூரிகளும், பாலிடெக்னிக்குகளும் இணைந்திருக்கும்.

அண்மையில் சென்னையில், தமிழ்நாடு கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆந்திரத் தொழில் நுட்பக் கல்வியமைச்சர் மதன் மோகன் விவாதித்தார்; இங்கு அவர் செய்தியாளர்களுடன் பேசுகையில், 'தமிழ்நாடு அரசு தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமைக்கும் யோசனைக்கு மத்திய அரசு அனுமதியளித்துவிட்டது; இன்னும் பல்கலைக் கழக மானியக் குழுதான் அனுமதி தர வேண்டியிருக்கிறது' என்று கூறினார்.

தமிழ்நாடு அரசின் இந்தத் திட்டம் தம்மைக் கவர்ந்துள்ளதாகவும், இதுபோன்ற திட்டத்தை வகுக்குமாறு ஆந்திரக் கல்வித்துறை செயலாளர்--தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் ஆகியோரையும், இதர அதிகாரிகளையும் தாம் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

ஒரிசா நிவாரணத்துக்கு ரூ. 166.35 கோடி

புவனேசுவரம், நவ. 10—

ஒரிசாவில் புயலால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்குக் குறைந்தபட்சம் ரூ 166 35 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

அமெரிக்க நிறுவனத்தின் உதவி

நியூயார்க், நவ. 10—

ஒரிசாவில் புயலால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் நிவாரணப் பணிகளுக்காக அமெரிக்கக் கத்தோலிக்க வெளிநாட்டு உதவி நிறுவனம், ரூ. 3,75,000 வழங்கியிருக்கிறது.

மேற்கு ஜெர்மனி உதவி

புயலால் பாதிக்கப்பட்டவர்கட்கு நிவாரணம் அளிப்பதற்காக மேற்கு ஜெர்மனி அரசு முதல் தவணையாக ரூ. 1.10 இலட்சம் அளித்திருக்கிறது.

ஒரு தனிப்பட்ட ஜெர்மனி உதவி நிறுவனம், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடுகள் கட்டவும் -- வேளாண்மைக் கருவிகள் வாங்கவும் ரூ 22 இலட்சம் அளித்திருக்கிறது.

டாடா நிறுவனங்கள் உதவி

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் செய்து தருவதற்காக டாடா டிரஸ்டுகள் -- நிறுவனங்கள் ஆகியவை கூட்டாக ஒரிசா முதலமைச்சரிடம் ரூ 1 இலட்சம் நன்கொடை வழங்கியிருக்கின்றன.

இனக்கொலை நடத்துவதால் 1-கோடி பேர் வெளியேற்றம்

இதுவும் ஒருவித ஆக்கிரமிப்புச் செயலேயாகும்

வங்க தேசப் போராட்டம் நீடிக்கும் வரை அபாயநிலை நீங்காது -- பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் விளக்கம்

புதுடில்லி, நவ. 11—

"கிழக்கு வங்கத்தில் இனப் படுகொலையே நடந்திருக்கிறது; ஒரு பாவமும் அறியாத மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்; இலட்சக்கணக்கான மக்கள் பாகிஸ்தானை விட்டுத் துரத்தப்பட்டார்கள்; அவர்கள் இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ளனர்; இந்த ஒரு பிரச்சினைக்காகவே அன்றி, வங்க தேசத்தில் என்ன நடக்கிறது என்பது பற்றியோ அல்லது அவர்கள் அங்கு எவ்வாறு சமாளிக்கப் போகிறார்கள் என்பது பற்றியோ இந்தியா கவலைப்பட அவசியம் எதும் இல்லை.

"இந்தியாவின் பொருளாதாரத்தையும் -- சமூக உறுதிப்பாட்டையும் சீர்குலைக்கும் எண்ணத்துடன்தான் ஒரு கோடி மக்கள் இந்நாட்டிற்குள் தள்ளப்பட்டுள்ளனர்; இது 'ஆக்கிரமிப்பு' போன்ற ஒன்றுதான்; இத்தகைய ஆக்கிரமிப்பை எதிர்ப்பது மிகக் கடினமாகும்.

"அன்புக்குரிய உற்றாரை இழந்து -- தங்களது உடைமைகள் அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்ட நிலையில் வந்துள்ள மக்களுக்குத் தங்கும் இடம் இல்லை என்று இந்தியா மறுத்திருந்தால் அது ஈவிரக்கமற்ற செயலாக இருந்திருக்கும்"

என்று பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம், கனடா ஒலிபரப்பு நிறுவனத்திற்கு அளித்த டெலிவிஷன் பேட்டி ஒன்றில் தெள்ளத் தெளிவுறச் சுட்டிக்காட்டினார்.

"வங்க தேசத்தில் நடந்தவற்றைத் தவிர, இந்தியா தானாக தவறு எதுவும் செய்யவில்லை; ஆனால் அதிபர் யாகியா கான், முழு அளவில் போர் நடத்துவதாக இந்தியாவை அச்சுறுத்தியிருக்கிறார்; 'வங்க தேசத்தில் விடுதலைப் போராட்டம் நீடிக்கும் வரையில் இந்தியாவுக்கு அபாயம் நீடிக்கும்' என்பதைத்தான் இது குறிக்கிறது"

என்றும் அவர் சுட்டிக்காட்டினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"கிழக்கிந்திய எல்லையில் இந்தியப் பகுதியின்மீது பீரங்கித் தாக்குதல் பெரும் அளவில் நடைபெற்று வருகிறது.

"மேற்கிந்திய எல்லையில், பாகிஸ்தான் விமானப் படையின் ஊடுருவல்கள் அதிகமாகி வருகிறது.

"வளர்ந்துவரும் நாடான இந்தியாவுக்குப் போர் விரும்பத்தக்கதல்ல என்ற காரணத்தினால்தான், இதையெல்லாம் நாங்கள் பொறுத்துக்கொண்டு வந்திருக்கிறோம்; ஆனால், இவற்றை நீண்ட காலத்திற்குப் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது.

"எல்லையில் இந்தியப் படைகளைப் பாகிஸ்தான் படைகள் தாக்கினால், இந்தியப் படைகள் எல்லையைக் கடந்து சென்று தாக்கும்படி உத்தரவிட்டிருப்பதாகக் கூறப்படுவது சரியா?' என்ற கேள்விக்குப் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டுக் கூறியதாவது:—

"இது சாதாரண பிரச்சினை; எந்த நாடாவது எதிரியால் தாக்கப்படுமானால் அந்நாடு என்ன செய்யும்? அந்த நாடு தன்னுடைய சொந்த மண்ணிலேயே போரிடுமா? அல்லது எதிரியின் மண்ணிலேயே சண்டை நடத்த முயலுமா? எந்த எதிரிக்கு எதிராகவும் எந்த நாடும் பின்பற்றக் கூடிய சாதாரண தற்காப்புத் தந்திரத்தைத்தான் நான் கூறினேன்."

"நிலைமை இப்போது எந்த அளவுக்கு ஆபத்தாக இருக்கிறது? இந்தியா போருக்கு எவ்வளவு நெருக்கத்தில் இருக்கிறது" என்ற கேள்விக்குப் பாதுகாப்பு அமைச்சர் பின்வருமாறு பதிலளித்தார்:—

"அது, அதிபர் யாகியா கானின் நோக்கத்தைப் பொறுத்திருக்கிறது; நாங்கள் போரை விரும்பவில்லை – ஆக்கிரமிக்கவும் நாங்கள் விரும்பவில்லை; 'இந்தியாதான் ஆக்கிரமித்தது' என்ற அவச்சொல்லை நாங்கள் சுமக்க விரும்பவில்லை; ஆனால் எந்த நாடாவது எங்களைத் தாக்குமானால், நான் நிச்சயமாக எனது நாட்டைக் காப்பேன்."

வி. வி. கிரியின் தியாக உணர்வு

தேடிவந்த பதவியை உதறித் தள்ளினார்

பழைய நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து பெருமிதம்

விசாகப்பட்டினம் நவ. 11—

"1916-ம் ஆண்டில் நான் வழக்கறிஞராகப் பதிவு செய்யப் போனபோது அப்போதைய சென்னைத் தலைமை நீதிபதி, எனக்கு மாவட்ட முன்சீப் பதவி தர முன்வந்தார்; அதனை நிராகரித்துவிட்டேன்"

என்று குடியரசுத் தலைவர் வி. வி. கிரி தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:—

"இந்தியா சுதந்தரம் அடையும் வரையில் அரசாங்க வேலையில் சேருவதில்லை -- என்று உறுதியை மேற்கொண்டதன் காரணமாகவே அந்த வாய்ப்பினை நான் அப்போது கைவிட்டேன்.

"இந்தப் பதவியை நான் நிராகரித்தது கண்டு அந்தத் தலைமை நீதிபதி வியப்படைந்தார்; 'பார் -- கவுன்சிலில் பதிவு செய்துகொண்டு குறைந்தது மூன்று ஆண்டுகளாவது அனுபவம் பெறுதவர்களுக்கு இப்பதவியைத் தர இதுவரையில் நான் முன்வந்தது கிடையாது' என்றும் அவர் கூறினார்.

"நான் என்னுடைய மனச்சாட்சியின்படியேதான் செயல்படுகிறேன்."

விசாகப்பட்டினம் வழக்கறிஞர் சங்கத்தில் உரையாற்றுகையில் மேற்கண்ட தகவலை வெளியிட்ட குடியரசுத் தலைவர் வி. வி. கிரி, பல ஆண்டுகளாக தமது குடும்பம் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டிருப்பதில் தாம் பெருமை அடைவதாகக் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் விமானம்மூலம் பூச்சிமருந்து தெளிக்கத் திட்டம்

செங்கற்பட்டு மாவட்டத்தில் துவக்கம்

சென்னை, நவ. 9—

தமிழ்நாட்டில் சுமார் 14 இலட்சம் ஏக்கர் நிலத்துக்கு விமானம் மூலம் பூச்சிமருந்து தெளிக்க அரசு திட்டமிட்டிருக்கிறது; இதில் 8.8 இலட்சம் ஏக்கர் நெற் பயிர் நிலங்களாகும்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் இந்தப் பணி துவங்கப்பட்டுவிட்டது; ஏற்கனவே 4.50 இலட்சம் ஏக்கர் நிலக்கடலைப் பயிருக்கு மருந்து தெளிக்கப்பட்டுவிட்டது. இது குறியளவைவிட அதிகமானதாகும்; 4 இலட்சம் ஏக்கரில் தெளிக்கவேண்டுமென்றுதான் திட்டமிடப்பட்டிருந்தது.

பருத்திப் பயிருக்கும் விமானம்மூலம் மருந்து தெளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

அகதிகள் நிவாரண நிதி

மாநில அரசுகள் விதிக்கும் புதிய வரிகள்

மத்தியப்பிரதேசத்தில் ரூ. 4 கோடிக்கு வரி

போபால், நவ. 11—

வங்கதேச அகதிகளுக்கு ஆகும் செலவுகளைச் சமாளிப்பதற்கு-- மத்திய அரசுக்கு உதவுவதற்காக மத்தியப்பிரதேச அரசு ரூ. 4 கோடிக்குப் புதிய வரிகளை விதிக்கிறது.

புதிய வரிகளை விதிப்பதற்கு வகை செய்யும் அவசரச் சட்டம் ஒன்றை மத்தியபிரதேச கவர்னர் பிரகடனம் செய்தார்.

மத்தியப்பிரதேசத்தில பஸ் கட்டணங்கள் -- கேளிக்கை வரி -- சாலைப் போக்குவரத்து வரி -- ஸ்டாம்பு தீர்வை ஆகியவை உயர்த்தப்படுகின்றன.

புதிய வரிகள், நவ. 15-ந்தேதி முதல் நடைமுறைக்கு வருகின்றன.

நகர பஸ் போக்குவரத்து நீங்கலாக இதர பஸ்களில் ரூ 1-க்கு மேற்பட்ட பயணக் கட்டணம் 5 சதவிகிதம் கூடுதலாகிறது.

ஸ்கூட்டர்கள் -- கார்கள் -- மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றுக்கான சாலை வரி 10 சதவிகிதம் உயர்த்தப்படுகிறது; லாரி--பஸ் போன்ற வர்த்தகத்துக்கும் பயன்படுத்தப்படும் வண்டிகட்கு இந்த வரி உயர்வு பொருந்தாது.

ரூ. 2 விலையுள்ள திரைப்பட டிக்கெட்டுக்கு வரி 10 காசு; அதேபோல் ரூ. 2-க்கும் கூடுதலாக விலையுள்ள திரைப்பட டிக்கெட்டுக்கு வரி 20 காசு; கேளிக்கை வரியும் உயர்த்தப்படுகிறது.

ஸ்டாம்பு தீர்வை 10 காசு உயர்த்தப்படுகிறது.

விற்பனை வரிச் சட்டத்தின்கீழ், ஏற்கனவே விதிக்கப்படும் வரியைத் தவிர விற்று வரவுமீது மேலும் ஒரு வரி விதிக்கப்படுகிறது.

பஞ்சாபில் ரூ. 1.25 கோடிக்கு புதிய வரிகள்

சண்டிகார், நவ. 11—

பஞ்சாபில் ரூ. 1 25 கோடிக்கும் மேற்பட்ட புதிய வரிகளைப் பஞ்சாப் அரசு அறிவித்தது.

பரிசுச் சீட்டுக்கள் -- திரைப்பட டிக்கெட்டுகள் -- வாகனங்கள் முதலியவற்றின்மீது விதிக்கப்படும் இந்தப் புதிய வரிகள் அடுத்த திங்கட்கிழமைமுதல் நடைமுறைக்கு வரும்.

வங்க தேச அகதிகள் பராமரிப்புக்கு நிதித் திரட்டுவதற்காக இந்தப் புதிய வரிகள் விதிக்கப்பட்டுள்ளன.

மாராட்டிரத்திலும் புது வரிகள் விதிக்கப்படும்

பம்பாய், நவ. 11—

வங்க தேச அகதிகள் பிரச்சினை காரணமாக மத்திய அரசின் உத்தரவுக்கிணங்க, மாராட்டிர அரசு அடுத்த கிழமை புதிய வரிகளை விதிக்கும்.

அமைச்சரவைக் கூட்டத்துக்கும் பிறகு முதல்வர் வி. பி. நாயக் இத்தகவலைத் தெரிவித்தார்.

அமைச்சரவை இன்று வரிப் பிரேரணைகளை விவாதித்தது என்றும், 17-ம் நாள் மீண்டும் நடக்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் வரிப் பிரேரணைகள் இறுதியாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

"புது வரிகள் மூலம் கிடைக்கும் நிதி மத்திய அரசிடம் தரப்படும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் சிறிய கார் உற்பத்தி

டில்லியிடம் மாநில அரசு கோரிக்கை

தொழில் அமைச்சர் செ. மாதவன் தகவல்

சென்னை, நவ. 11—

" தமிழ்நாட்டில் மோட்டார் தொழில் தொடங்குவதற்கு வேண்டிய அடித்தளம் இருப்பதால் திட்டமிடப்பட்டிருக்கும் சிறிய கார்கள் திட்டத்தைத் தமிழ்நாட்டில் ஏற்படுத்தும்படி மத்திய அரசை தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.

அண்மையில், தலைமையமைச்சருடனும்--தொழில்வளர்ச்சி அமைச்சருடனும், தமிழக முதலமைச்சர் இது பற்றி விவாதித்தார்; மோட்டார் தொழிலுக்கு வேண்டிய உறுப்புக்களைத் தயாரிக்கும் தொழில்கள் தமிழ்நாட்டில் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்; தமிழக அரசின் கோரிக்கையைப் பரிசீலிப்பதாக மத்திய அரசு உறுதியளித்திருக்கிறது "

என்று தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள், பிளாஸ்டிக் இரசாயனப் பொருள் பீங்கான் பொருட்காட்சித் துவக்க விழாவில் தலைமை தாங்கிப் பேசுகையில் தெரிவித்தார்; அகில இந்திய தொழில்துறை உற்பத்தியாளர் நிறுவனம் இந்தப் பொருட்காட்சியை ஏற்பாடு செய்திருக்கிறது.

கிழக்கு வங்கத்தில் பழி வாங்கும் படலம்

59 பேருக்குச் சிறைத் தண்டனை

டாக்கா, நவ. 11—

" தங்கள்மீது கூறப்பட்ட புகார்களுக்குப் பதிலளிக்க அதிகாரிகள் முன்பு ஆஜராகத் தவறியதற்காகக் கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்த 55 சிவில் அதிகாரிகளுக்கும், டாக்கா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 4 ஆசிரியர்களுக்கும் தலா 14 ஆண்டு சிறைத் தண்டனையை டாக்காவில் ஒரு தனி இராணுவ நீதிமன்றம் அளித்திருக்கிறது "

என்று பாகிஸ்தான் செய்தி நிறுவனமான அசோசியேடட் பிரஸ் கூறியது

கிழக்கு வங்காள நிதித் துறை கூட்டுச் செயலாளர், சில துணைக் கமிஷனர்கள், முஸ்லிம்கள் அல்லாத 16 கிழக்கு வங்காள சிவில் அதிகாரிகள் ஆகியவர்கள் தண்டனை பெற்றவர்களில் உள்ளனர்.

மைசூர் அரண்மனையில் ஓட்டலா?

'மாநகராட்சி அனுமதி வழங்காது' என உறுதி

வரலாற்றுச் சின்னமாக மாற்ற நடவடிக்கை

பெங்களூர், நவ. 11—

" மைசூர் மன்னருக்குச் சொந்தமான பெங்களூர் அரண்மனையை சொகுசு ஓட்டலாக மாற்றும் திட்டத்துக்கு, மாநகராட்சி அனுமதி வழங்காது "

என்று, பெங்களூர் மாநகராட்சி ஆளும் கட்சித் தலைவர் திவாரி என்பவர் உறுதியளித்திருக்கிறார்.

அண்மையில் இந்த அரண்மனையை ஓட்டலாக மாற்றப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

" இந்த அரண்மனையை மாநகராட்சி எடுத்துக்கொண்டு அதை வரலாற்றுச் சின்னமாகக் கருதி காப்பாற்றி வரவேண்டும் " என்று உறுப்பினர்கள் கோரினர்.

நெருக்கடி காலத்தில் அவசர உதவி

மத்திய மக்கள் கழகத்தின் பணி

புதுடில்லி, நவ. 11—

அவசர நெருக்கடி ஏற்பட்டால் அதைச் சமாளிப்பதற்காக மக்களைத் தயார்படுத்த, மக்கள் மத்தியக் கழகம் திட்டம் ஒன்றை வகுத்திருக்கிறது.

1962 சீன ஆக்கிரமிப்பின்போது துவக்கப்பட்ட இக்கழகம், தனது பணியை இப்போது தீவிரப் படுத்தியிருக்கிறது.

இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு உதவி செய்வது -- சமுதாய அமைதியை ஏற்படுத்துவது -- மக்களின் உறுதியைப் பலப்படுத்துவது போன்ற நான்கு அம்சத் திட்டம் ஒன்றை அது வகுத்திருக்கிறது.

இக்கழகத்தின் துணைத் தலைவரான ஜி. எல். நந்தா, இது குறித்து எல்லா மாநில முதலமைச்சர்கள் -- அல்லது கவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

ஒவ்வொரு மாநிலத்திலும் முதலமைச்சர் அல்லது கவர்னரைத் தலைவராகக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டிக்கிறார்.

அவசரக் காலதில் மக்களுக்குத் தத்தம் கடமையை உணர்த்துவதே இக்கழகத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

பாகிஸ்தான் விமானங்களின் எல்லை மீறல்கள்

ஜம்மு, நவ. 11—

ஜம்முவில் இந்தியப் பகுதிக்குள் பாகிஸ்தான் விமானப் படை மீண்டும் ஒரு முறை ஊடுருவல் செய்தது; ஒரு பாகிஸ்தான் விமானம் அத்துமீறி வந்தது.

கடந்த ஒரு திங்களுக்குள் இது நான்காவது எல்லை மீறல் ஆகும்.

இந்திய விமானம் அதை விரட்டியடிப்பதற்குள் பாகிஸ்தான் ஆதிக்கப் பகுதிக்குள் அந்த விமானம் பறந்தோடிவிட்டது.

புதுடில்லியில் இருட்டடிப்பு

இருமுறை ஒத்திகை

புதுடில்லி நவ. 11—

புதுடில்லியில் நேற்று இரவு இருட்டடிப்பு ஒத்திகை இருமுறை நடத்தப்பட்டது; இரு தடவையும் ஒத்திகை 15 நிமிட நேரம் நடைபெற்றது.

சரியாக இரவு 7-45 மணிக்கு விமானத் தாக்குதல் எச்சரிக்கை சங்கு ஒலித்தது; இரண்டாவது ஒத்திகையின்போது அந்தச் சங்கு இரவு 815 மணிக்கு ஒலித்தது.

முதலில் நடந்த இருட்டடிப்பு ஒத்திகை தோல்வி என்றும், இரண்டாவது ஒத்திகை வெற்றிகரமாக நடந்தது என்றும் சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

" அரசு அலுவலகங்களிலும் -- வர்த்தக அலுவலகங்களிலும் இருட்டடிப்புச் செய்ய சிறிது நேரம் ஆயிற்று " என்றனர்.

இரண்டாவது ஒத்திகையின் போது, டில்லி டெலிவிஷன் நிலையக் கூண்டின்மீது உள்ள சிவப்பு எச்சரிக்கை விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன; நகரப் போக்குவரத்துப் பஸ்கள் சிலவும் ஓடிக்கொண்டிருந்தன.

பம்பாயில் இருட்டடிப்பு ஒத்திகை

பம்பாய், நவ. 11—

பம்பாய் நகரிலும் -- சுற்றுப்புறப் பகுதிகளிலும் நேற்று இரவு 7-மணி முதல் 8-மணி வரை இருட்டடிப்பு ஒத்திகை நடத்தப்பட்டது.

இந்த ஒத்திகை 85 சதவிகிதம் வரை திறமையாக இருந்ததாக சிவில் பாதுகாப்பு இயக்குநர் தெரிவித்தார்.

640 சதுர கிலோ மீட்டர் பகுதியில் ஒத்திகை நடத்தப்பட்டது.

இரயில்வே, பம்பாய்த் துறைமுகம், விமான நிலையம், தொழிற்சாலைகள், ஆலைகள் ஆகியவை இருட்டடிப்புச் செய்தன.

" இருட்டடிப்பு ஒத்திகையைக் கடைபிடிக்க மோட்டார் ஓட்டிகள் மீது அடுத்த தடவை கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் " என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய ஹெலிகாப்டரைச் சுட பாகிஸ்தான் முயற்சி

ஜ[illegible]விலுள்ள இந்தியப் பகுதிக்கு[illegible] பறந்து[illegible]டிருந்த இந்திய ஹெலிக[illegible] ஒன்றைப் பாகிஸ்தான் இராணுவத்தினர் சுட்டனர்; ஆனால் அதன்மீது குண்டு தாக்கவில்லை.

கட்சிக்கு முழுக்குப் போட்டார் பொள்ளாச்சி சிண்டிகேட் தலைவர்

நாவலர் முன்னிலையில் கழகத்தில் சேர்ந்தார்

தி.மு.கழக வேட்பாளர் மோகன்ராசுவை ஆதரித்துப் பொதுக்கூட்டத்தில் பேச்சு

பொள்ளாச்சி, நவ. 11—

பொள்ளாச்சி நகர சிண்டிகேட் காங்கிரசுத் தலைவர் பி.கே.டி. நடராசன், அக்கட்சியிலிருந்து விலகி நாவலர் முன்னிலையில் தி. மு. கழகத்தில் சேர்ந்தார்.

பொள்ளாச்சி நகர மன்றத்தின் சிண்டிகேட் கட்சித் தலைவராக இருந்தவர் பி. கே. டி. நடராசன்; பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளராக சிண்டிகேட் சார்பில் அவரை நிறுத்த அக்கட்சி திட்டமிட்டிருந்தது; ஆனால் அவர் சிண்டிகேட் கட்சியிலிருந்தே விலகிவிட்டார்.

நேற்று முன்தினம் நடந்த தி. மு. கழகக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் நாவலர் முன்னிலையில் அவர் தி. மு. கழக உறுப்பினராகச் சேர்ந்தார்; அக்கூட்டத்தில் அமைச்சர் மு. கண்ணப்பன், மாவட்ட தி. மு. க. செயலாளர் இராசமாணிக்கம் ஆகியோரும் உடனிருந்தனர்.

பி. கே. டி. நடராசன், பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறியதாவது :—

" ஒரு கட்சி என்பது கொள்கைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு இருக்க வேண்டும்; மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய கட்சியாகவும் அது இருக்க வேண்டும்.

" நான் சிண்டிகேட் கட்சியிலிருந்தபோது, அக்கட்சி இம்மாதிரி அடிப்படை வாய்ந்த பணிகளைப் புரியும் என்றும், சோஷலிசத் திட்டங்களை உருவாக்கும் என்றும் நம்பினேன்; ஆனால் இப்படிப்பட்ட செயல்கள் வெறும் சொல்லளவில் தான் சிண்டிகேட் கட்சியில் உள்ளன என்பதைக் கண்டேன்.

" எங்கள் இலட்சியம் எல்லாம் ஏழைகளின் வாழ்வு உயர்த்தப்பட வேண்டும் என்பதுதான் என்று நாலரைக் கோடி மக்களின் நாயகராக விளங்கும் கலைஞர் கருணாநிதி அவர்கள் அறிவித்திருந்தார்; சாதாரணமானவர்களுக்குக்கூடத் தெரியும் அளவில் தங்கள் கொள்கைகளை அவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

எனவே, கழகப் பொதுச் செயலாளர் முன்னாகவும் -- அமைச்சர் கண்ணப்பன் முன்னாகவும் கழகத்தின் கொள்கைகளை ஏற்று கழக உறுப்பினராகச் சேருகிறேன்.

நான் நகராட்சி உறுப்பினராக வகிக்கின்ற பதவியைத்துறந்து வேண்டுமானாலும் வருகிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வரும் இடைத் தேர்தலில் வேட்பாளர் மோகன்ராசுவை அனைவரும் ஆதரிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்."

அறுபதை எய்துகிறார் என்.வி.என்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச்செயலாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார்.

குடந்தையில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை முன்னின்று நடத்திக் கைது ஆனார்.

தந்தை பெரியாரின் செயலாளராக 9 ஆண்டுகள் இருந்தார்; அண்மையில் அவர் பெரியாரைச் சந்தித்தபோது, 'அமைச்சர் என். வி. நடராசன் என்னிடம் முன்பு செயலாளராக இருந்தவர்; வெறும் செயலாளர் மட்டும் அல்லர் -- நேர்மையும் -- கண்ணியமும் மிக்கவர்' என்று அருகில் இருந்தவர்களிடம் பெருமையோடு கூறினார்.

1949-ல் தி. மு. கழகம் அமைக்கப்பட்டபோது, அதன் அமைப்புச் செயலாளராகவும், 1955 முதல் 1960 வரை துணைப் பொதுச் செயலாளராகவும், 1960 முதல் 1969 வரை மீண்டும் அமைப்புச் செயலாளராகவும் பணியாற்றினார்.

1970-ல் துணைப் பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்றார்.

1953-ல் தி. மு. கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தின் போது, முன்கூட்டியே கைது செய்யப்பட்டுச் சிறைத் தண்டனை பெற்ற அண்ணா உள்ளிட்ட ஐம்பெருந் தலைவர்களில் என். வி. என். அவர்களும் ஒருவராவார்.

குன்றத்தூரில் 144 தடையுத்தரவை மீறிப் பொதுக்கூட்டத்தில் பேசச் சென்ற என். வி. என். அவர்கள் கைது செய்யப்பட்டதும், அப்போது குன்றத்தூரில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதும் கழக வரலாற்றில் முக்கிய நிகழ்ச்சியாகும்.

கழகம் நடத்திய போராட்டம் அனைத்திலும் முக்கிய பங்கு கொண்டு சிறை வாழ்க்கை அனுபவித்துள்ள என். வி. என். அவர்களுக்கு, கழக வரலாற்றிலும் சிறப்பிடம் உண்டு.

மலேசியா, சிங்கப்பூர் ஆகிய வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் செய்துள்ள என். வி என். அவர்கட்கு மலேசியாவில், திருக்குறள் மணி' என்ற சிறப்புப் பட்டமும் வழங்கப்பட்டது.

1969-ம் ஆண்டு ஆகஸ்டு 8ந் தேதி, கலைஞர் அமைச்சரவையில் பிற்பட்டோர் நல அமைச்சராக நியமிக்கப்பட்டார்; 1971-ல் தொழிலாளர் நல அமைச்சர் ஆனார்.

1947 முதல் 1966 வரை, 'திராவிடன்' என்ற வார இதழை நடத்தி வந்தார்.

தொடக்கக் காலத்தில் அச்சுக் கோப்பவராக இருந்து--சொந்த முயற்சியால் முன்னேறியவர் என். வி. நடராசன.

பேரறிஞர் அண்ணா அவர்கள், என். வி. நடராசன அவர்களை, 'செயல்வீரர்' என்று பாராட்டியுள்ளார்.

'நமது கடவுள்கள்' — 'முதலாளி ஒழிக' — 'இலட்சியப் பாதை' என்ற புத்தகங்களை என். வி. நடராசன் எழுதியுள்ளார்.

திரு. என். வி. நடராசன் அவர்கட்கு 4 பிள்ளைகளும் -- 3 பெண்களும உள்ளனர்.

மூத்த மகன் என். வி. என். சோமு, வழக்கறிஞராகவும், சென்னை மாநகராட்சி உறுப்பினராகவும் இருக்கிறார்; செல்வம் பாண்டியன், சாக்ரடீஸ் ஆகியோர் படித்துக்கொண்டிருக்கின்றனர்.

நாராயணி, மணிமேகலை ஆகிய பெண்களுக்குத் திருமணம் ஆகிவிட்டது; இவர்களின் தங்கையின் பெயர் 'ஆசைத் தங்கை'.

பாகிஸ்தானில் பொருளாதாரச் சீரழிவு

விலை உயர்வு -- உற்பத்திக் குறைவு --தொழில் துறையில் தேக்கம்

ஜலந்தர், நவ. 11—

பாகிஸ்தானின் பொருளாதார நிலை கடுமையாகச் சீரழிந்து விட்டதாகத் தெரியவருகிறது; இதனால் பல தொழில் நிறுவனங்களும் மூடக்கூடிய நிலையில் இருக்கின்றனவாம்.

மூலப் பொருட்களின் விலை உயர்வும் -- மக்களின் வாங்கும் சக்தி குறைந்துபோனதும் தான் இதற்குக் காரணமாகும்.

பொருட்கள் தேக்கம் எல்லாத் துறைகளில் ஏற்பட்டிருக்கின்றனவாம்.

இவைகளுக்கெல்லாம் மேலாக, அரசாங்கம், கடன் பெறுவதில் பல கட்டுப்பாடுகளையும் விதித்திருக்கிறதாம்.

இத்தகவல்களை வெளியிட்ட பாகிஸதான் நாளிதழ், 'டான்' சம்பந்தப்பட்ட தொழில் அதிபர்களும் -- அதிகாரிகளும் கூடி, உடனடியாக இப்பிரச்சினையை ஆராய வேண்டுமென்றும், இல்லையென்றால், மேலும் நிலைமை மோசமாகுமென்றும் பாகிஸ்தான் வணிகக் கழகம் அரசைக் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிவித்தது.

அனைத்துப் பாகிஸ்தான் ஆலைச் சொந்தக்காரர்கள் சங்கம், உற்பத்திப் பொருட்கள் ஏராளமாகத் தேங்கிக் கிடக்கிறதென்றும், உடனடியாக பஞ்சின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்திருப்பதை அப்பத்திரிகை சுட்டிக் காட்டியது.

" கிழக்கு வங்கத்தில் சணல் உற்பத்தி பாதியளவுக்குக் குறைந்து விட்டது; இது மேலும் குறையக் கூடும் " என்றும் அப்பத்திரிகை கருத்தறிவித்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-1) அச்சிட்டு, வெளி[illegible]